Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -26 | 09-03-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை-020

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கன்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(926J) 077-6059672

# மட்டு- திருமலை ஆயர்-புலிகள் சந்திப்பு

# மட்டு-அம்பாறை நிலை குறித்து ஆராய்வு



## அரசியல்துறைப்பொறுப்பாளர், தளபதிகள் பங்கேற்பு

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பு நிலைமைகுறித்து தமிழீழ விடுதலைப்புலிக ளுடன் ஆராய மட்டு- திருமலை ஆயர் கிங்சிலி சுவாம் பிள்ளை தலைமையிலான குழுவினர் நேற்றுக் கிளிநொச்சிக்கு வருகை தந்தனர். கிளிநொச்சிக்கு வருகைதந்த இக் குழுவினர் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மட்டு- அம்பாறை மாவட்டத் தளபதிகள் உள்ளிட்டோரைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்ட நிலைமை குறித்து ஆராய்ந்தனர்.**

நேற்றுக் காலை கிளிநொச்சியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது.இச்சந்திப்பு தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிக்கையில்;

கேள்வி:- மட்டு- திருமலை ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை தலைமையிலான குழுவினருடனான சந்திப்புப் பற்றிக கூற முடியுமா?

பதில்:- மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலிருந்து ஆயர் வண. கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களும் அங்குள்ள புத்திஜீவிகளும் வர்த்தக பெருமக்களும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் வந்தார்கள். அங்குள்ள நிலைமைகள் பற்றி எங்களிடம் கவலையோடு முன்வைத்தார்கள். நாங்கள் அவர்களுக்குத் தெளிவாக விளக்கினோம். குறிப்பாக, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விசேட தளபதி ரமேஸ், தளபதி,

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குப் பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுந்துள்ள பதற்ற நிலையினையடுத்துகிழக்குப் பல்கலைக் கழகத்தை காலவரையறையின்றி மூடுவதென பல்கலைக்கழக நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.

பெரும்பாலான வடபகுதி மாணவர்கள் கேட்டுக் கொண்ட தற்கிணங்க பல்கலைக் கழகம் மூடப்பட்டதாகவும் இது தற்காலிகமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.சுயேட்சைக்குழு I வேட்பாளர் மீது தாக்குதல்

சுயேட்சையாகப் போட்டியிடும் வீ.ஆனந்தசங்கரியின் குழுவிற்குச் சார்பாகப் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தோர் மக்களால் நையப் புடையப்பட்டுள்ளதுடன் அவர்கள் வசமிருந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட துண்டுப்பிரசுரங்களும் மக்களால் தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 10மணியளவில யாழ்.பலாலி வீதியில் உள்ள கெற்றப்போல் சந்திப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவம்பற்றி தெரியவருவது,

(8ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மூவர் பொலிசாரால் கைது

### எதிர்த்து மறியல் போராட்டம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மூவரை பொலிசார் கைது செய்தமையைக் கண்டித்து, கூட்டமைப்பின் வேட்பாளர்களுள் ஒருவரான நடராசா ரவிராஜ் மேற்கொண்ட வீதி மறியல் போராட்டத்தினால் கண்டி வீதியூடான போக்குவரத்து நேற்று மாலை கணிசமான நேரம் துண்டிக்கப்பட்டது. மறியலில் ஈடுபட்ட ந. ரவிராஜ் உடன் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்றமான சூழலையடுத்து படையினரும், பொலிசாரும் அங்குபெருமளவில் குவிக்கப்பட்டனர்.எனினும்கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமானத்தை மதிக்காத செயல்கள் நீண்டகாலம் நிலைத்திருக்கமாட்டாது

### *மட்டு- அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்*



கருணா என்கின்ற தனிமனிதனுடைய முடிவுக்குத் துணையாக இருந்து சிலர் சில மோசமான மனிதாபி மானத்திற்கு அப்பாற்பட்ட மனிதாபிமானத்தை மதிக்காதசிலசெயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது எமக்கும் அந்த மக்களுக்கும் பெரிய வேதனையைத் தந்தாலும் இந்தச் செயற்பாடு என்பது மக்கள் மத்தியில் நிலைத்து நிற்காது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.இவ்வாறு மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்

கேள்வி:-

மட்டக்களப்பு அம்பாறை மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

(8ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரை வழமையாகச் சந்திப்பதுபோன்றே இம்முறையும் சந்திக்க கிளி. வந்துள்ளேன்

### திருமலைத் தளபதி பதுமன்



நான் திருகோணமலையிலிருந்து வந்து தலைவரை அடிக்கடி சந்திப்பது வழக்கம் மூன்று மாதத்திற்கொருமுறை அல்லது நான்கு மாதத்திற்கொருமுறை சந்திப்பது வழக்கம். அந்தசந்திப்பின் நோக்கமாகத்தான் நான் வந்துள்ளேன்.இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தளபதி பதுமன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கருணா ஏற்படுத்தியிருக்கும் பதட்டசூழலில் திருகோணமலை மக்கள் மத்தியில் திருகோணமலையின் தளபதியாக இருக்கின்ற கேணல் பதுமன் அவர்கள் தொடர்பாக ஒருவதந்தி பரப்பப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நேற்று கிளிநொச்சியில் வைத்து தளபதி

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேசியத் தலைவரின் ஆற்றுப்படுத்தலில் தமிழீழப் பெண்கள் வல்லமை பெற்றுள்ளனர்

### -சர்வதேச மகளிர் நாள் நிகழ்வில் தமிழினி

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஆற்றுப்படுத் தலினால் தமிழீழப் பெண்கள் உலகமே வியர்ந்துநோக்கும் வல்லமையை பெற்றிருக்கிறார்கள் எனத் தமிழீழ மகளிர் அரசியல்துறை பொறுப் பாளர் தமிழினி தெரிவித் துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி நேற்று யாழ். நாவலர்கலாசார மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வு கழகத்தினரால் நடாத்தப்பட்ட ஆய்வரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேசமே இன்று தமிழீழப் பெண்களின் போரியல் அரசியல்,சமூகவியல்ரீதியான விழிப்புணர்வையும், ஆற்றலையும் வியந்து நோக்கிறது இதற்குக் காரணம் பெண்ணினம் விடுதலை பெறவேண்டும் என்பதற்காக தேசியத் தலைவர் அவர்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் இன்று கிளி. வருகின்றார்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களை பிரிட்டிஷ் தூதுவர் இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று காலை 10.30 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடையும் இவர் காலை 11.00 மணிக்கு தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் அவர்களை விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் வைத்து சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இன்றைய பேச்சுக்களின் போது கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இன்றைய நிலை தொடர்பாகவும் நடைபெறவுள்ளபொதுத்தேர்தல் தொடர்பாகவும் யுத்தம் நீங்கிய சூழலில் மக்களின் 'வாழ்வியலின் நிலைபற்றியும் அதில் ஏற்பட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தவறிவிட்டது

### தவறிவிட்டது

ஜெயகாந்தன் அமலினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை கிளிநொச்சிக்கும், வட்டக்கச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் வட்டக்கச்சி இளவேனில் வாணிபத்தில் அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் அத்தோடு மோட்டார் ஊர்திப் பகுதிக்கான கடிதம் ஒன்றும் தவறவிடப்பட்டுள்ளது. (சி-4303)

### பொது அறிவுத் தகவல்கள்

எதிர்வரும் ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான திருமதி மேரி ஜேசுதாசனின் மிகச் சமீப காலஉள்நாட்டு,வெளிநாட்டு விடயங்களடங்கிய 'பொது அறிவுத் தகவல்கள்' நூல் வெளிவந்து சகல புத்தகக்கடைகளிலும் விற்பனையாகிறது. (4299)

### தவறிவிட்டது

செல்வராசா ராகுலன் ஆகிய எனது பயண அனுமதி அட்டை மற்றும் 853091286V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை என்பன ஒருகைப் பேசுடன் புளியங்குளத்திற்கும் மல்லாவிக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது தாரணி தேன்சுவையகம் மல்லாவினும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.
தகவல்:- ராகுலன் (சி-9326)

# மக்களை அச்சுறுத்தும் விதமான பிரச்சாரத்தை ஈ.பி.டி.பி. நிறுத்த வேண்டும்

## -வடமராட்சி க.கூ.ச.ச.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)
மக்களை அச்சுறுத்தும் விதமாக ஈ.பி.டி.பி.யினர் மேற்கொண்டு வரும் பிரச்சார நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குப் புறம்பாக மக்களின் வாக்குகளைச் சுவீகரிக்க முயலும் இச் சமூகவிரோதிகளின் செயற்பாடுகளை மக்கள் எதிர்த்து வருகின்றனர். இதனால் தேர்தல் பிரச்சாரங்கள் அனைத்தையும் ஈ.பி.டி.பி.யினர் இராணுவத்தினரின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

பெருமளவான இராணுவப் பாதுகாப்புடன் தமது கருத்தை மக்கள் மத்தியில் இவர்கள் திணிக்க முயல்கின்றார்கள் இதனால் மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கை குறித்து தமது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ள கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. (33)

### கண்டெடுப்பு

விசுவலிங்கம் சிவகௌரி 149 சேவிஸ் வீதி கனகாம்பிகைக் குளம் என்பவரது தேசிய அடையாள அட்டை இல 685543109V மற்றும் மக்கள் வங்கி சேமிப்புக் கணக்குப் புத்தகம் என்பன கிளி. கந்தசுவாமி ஆலயம் முன்பாக கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.(சோ)

### அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)
கிளி.மாவட்ட அதியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கிளி. மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு கிளி. மாவட்ட சகல திணைக் களம், மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவன தலைவர்கள், பொறுப்பதிகாரிகள், பொறுப்பாளர்கள் அனைவரையும் தவறாது சமூகம் அளிக்கும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# கணனிப்பயிற்சியில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)
புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சின் அனுசரணையுடன் கிளி மாவட்ட செயலகத்தால் நடாத்தப்பட்ட இரண்டாவது கணனிப் பயிற்சி நெறியில் பங்குபற்றி சித்தி யெய்திய பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

கிளி. மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் தலைமையில் எதிர்வரும் 13ம் திகதியன்று காலை 9.30 மணிக்கு கிளி மாவட்ட செயலக மண்டபத்தில் வைத்து மேற்படிசித்தியடைந்த பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதால் இப்பயிற்சி நெறியில்சித்தியடைந்த அனைவரையும் அன்றையதினம் தவறாதுசமூகமளிக்கும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளன. (சோ)

# கிளி. வன்னேரிப் பகுதியில் முன்பள்ளி திறப்புவிழா

(அலுவலகச் செய்தியாளர்)
கிளிநொச்சி வன்னேரிக்குளக் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற கலைவாணி முன்பள்ளி கடந்த வெள்ளிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப் பெற்றது.

வன்னேரிக்குளம் சமூக அபிவிருத்தி பொருளாதாரக் குழுத் தலைவர் றெமின்யூஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கேற்றலினை தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை மாவீரர் மலரவனின் சகோதரி லலிதா ஏற்றி வைத்தார்.முன்பள்ளிப் பெயர்ப் பலகை யினை போருட் நிறுவனத் திட்ட இணைப்பாளர் ஆர். ஜெயக்குமார் திரைநீக்கம் செய்து வைத்தார். சிறப்புரையினை முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர்,கரைச்சிப் பிரதேச உப பணிமனைப் பொறுப்பதிகாரி, போருட் நிறுவனப்பிரதிநிதி ஆகியோர் நிகழ்த்தினர்.நிகழ்வில் பெருந்திரளான மக் கள் கலந்து சிறப்பித்தமைகுறிப்பிடத்தக்கது.(சோ)


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவைப் படுவோர்க்கு

## நியூ வேல்ட் பாதுகாப்புச் சேவை

அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களிற்கு பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் தேவை சம்பந்தமாக அனுபவம், ஆற்றலும் கொண்ட பணியாளர்கள் எம்மிடம் இருப்பதால் பகல், இரவு சேவைகளும் வேண்டுகையாளரிற்கு விசேடசேவைவழங்கப்படும். கீழ்க் குறிப்பிடும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தொட/முக-
பணிப்பாளர்,
நியூவேல்ட் பாதுகாப்புச் சேவை,
கரடிப்போக்குச் சந்தி,
கிளிநொச்சி.
பதிவு இல:-327

(4304)



# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

| | |
|---|---|
| 01.உபபரிசோதகர் :- | க.பொ.த(உயர்தரம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18—25 வரை. உயரம் 5'ற்கு மேல். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 02.காவல்துறை உறுப்பினர் :- | க.பொ.த(சாதாரணம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும். வயதெல்லை 18—25 வரை உயரம் 5'ற்கு மேல். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 03.எழுதுவினைஞர் :- | க.பொ.த(சாதாரணம்) சித்தியுடன் 05பாடங்களில் தமிழ் மொழி உட்பட திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த.(உயர்தரம் ) சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 04. தட்டெழுத்து/ சுருக்கெழுத்தாளர் :- | க.பொ.த.(சாதாரணம்) சித்தியுடன் தட்டெழுத்து/ சுருக்கெழுத்தில்தகைமையுடன்,நிமிடத்திற்கு 15சொல்லுக்கு குறையாமல் தட்டெழுத்து செய்தல்வேண்டும். |
| 05. அலுவலக உதவியாளர் :- | க.பொ.த(சாதாரணம்) தமிழ் மொழி உட்பட06 பாடங்கள சித்தியடைந்திருத்தல்வேண்டும் வயதெல்லை –18—25 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 06. கணனி இயக்குனர் :- | க.பொ.த.(சாதாரணதரம்) சித்தியுடன் கணனிகற்கைநெறி பிரிவுகளில் அதிகூடிய பிரிவுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| 07. வரவேற்பாளர் :- | க.பொ.த.(சாதாரண தரம்) சித்தியுடன் நல்ல பேச்சுவன்மை இருத்தல் வேண்டும். வயதெல்லை 18—25 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 08. மொழிபெயர்ப்பாளர் :- | ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்தலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். |
| 09. சாரதி :- | இலகு/கனகரக வாகனம் செலுத்துவதற்குரிய அனுமதிப்பத்திரம இருத்தல் வேண்டும். சாரத்தியத்தில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும் வயதெல்லை 20—30வரை. |
| 10. மெக்கானிக் :- | மோட்டார் சைக்கிள் /டீசல் இயந்திரங்கள் திருத்துதலில் நல்ல அனுபவம் இருத்தல் வேண்டும். |

மேற்கூறிய பதவிகளுக்கு தெரிவு செய்யப்படுவோருக்கு உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி மேலதிகமாக வழங்கப்படும்.

## தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணி

## பதவி வெற்றிடங்கள்

| | |
|---|---|
| உறுப்பினர்:- | நல்ல தேக ஆரோக்கிமுடையவராக இருத்தல் வேண்டும். வயதெல்லை 18-23 வரை ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். **சம்பளம்-அடிப்படை 7,000/=** |

உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து வசதி,என்பன மேலதிகமாக வழங்கப்படும்.

தகைமையுடையவர்கள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறை நடுவப்பணியகத்திற்கு 09.03.2004முதல் 20.03.2004வரை நடைபெற உள்ள நேர்முக தேர்வுக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல் துறை,
தமிழீழவிடுதலைப்புலிகள்.

(சி-9327)

# அமெரிக்க நிர்வாக தலைமையகம் மீது அதிகாலையில் ரொக்கற் தாக்குதல்!

## பாக்தாத்தில் மற்றுமொரு நடவடிக்கை

(பாக்தாத்)

**ஈராக் தலைநகரில் அமைந்துள்ள அமெரிக்கா தலைமையிலான நிர்வாக தலைமைக்காரியாலயம் நேற்று அதிகாலை ரொக்கற் தாக்குதலுக்கு இலக்கானது.**

இந்தத் தலைமைக் காரியாலயம் மீது கெரில்லாக்கள் அதிகாலை 10ரொக்கற்றுக்களை ஏவித் தாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் எவருக்கும் பாரதூரமான பாதிப்பு ஏற்படவில்லையென்றும் பொலிசாரும் அமெரிக்க இராணுவத்தினரும் தெரிவித்துள்ளனர்.

சிறிது நேரத்தில் அப்பகுதியில் பாரிய குண்டொன்று வெடித்ததை அடுத்து துருப்புக்கள் அவ்விடத்தை முற்றுகையிட்டன. ரொக்கற் தாக்குதல்கள் கார் ஒன்றிலிருந்தே தொடுக்கப்பட்டதென பொலிசார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலை அடுத்து காரை அதே இடத்தில் விட்டுவிட்டு கெரில்லாக்கள் தப்பி ஓடியிருக்கிறார்கள் காரை பரிசோதனை செய்தபோது அதில் வெடிபொருடகள் இருக்கக் காணப்பட்டன. தாக்குதலால் கட்டடங்கள் சிறிது சேதமடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. மேலும் அமெரிக்க இராணுவ உயர் அதிகாரிகள் பலர் இந்த அலுவலகத்தில் தங்கியிருந்ததாகவும் இவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையெனவும் கூறப்படுகிறது.



ஐவரிக்கோஸ்ட் கிளர்ச்சியாளர்கள் அரசதரப்பினருக்கிடையில் சமாதானத்தின் முதற்படியாக கடந்த பெப்ரவரி 20ஆம் திகதியன்று ஒரு தொகுதி ஆயுதங்களை ஒப்படைப்பதைப் படத்தில் காண்க.

# சட்டவிரோதக் குடியேறிகளை அவுஸ்திரேலியா திருப்பியனுப்பியது!

அவுஸ்திரேலியாவில் வட பகுதியிலிருந்து 840 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அஸ்மோர் தீவில் தங்கியிருந்த 15 சட்டவிரோத குடியேறிகளை அந்த நாட்டின் கரையோர காவல் படையினர் இந்தோனேசியாவுக்கு திரும்பி செல்லுமாறு பணித்துள்ளனர்.

இவர்கள் முதலில் கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அங்கிருந்து இந்தோனேசியாவுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது. சட்ட விரோத குடிவரவாளர்கள் கருத்து தெரிவிக்கையில் தாங்கள் ஒவ்வொருவரும் 260 டொலர்களை செலுத்தியதாகவும் அவுஸ்திரேலியாவிற்கு அழைத்து செல்லப்படுவோம்மென உறுதி மொழி வழங்கப்பட்டதாகவும் கூறினார்கள்.

சட்டவிரோத குடியேற்றத்துக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இது மூன்றாவது நடவடிக்கையாகும்.

# கோர விபத்தில் 7 மாணவர்கள் பலி!

வியட்னாமில் தெற்குப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 7 மாணவர்கள் பலியாகினர். மேலும் 15 மாணவர்கள் காயமடைந்தனர்.

பாடசாலையிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த மாணவர்களுக்கான பேருந்து எதிரே வந்த பார ஊர்தியுடன் மோதிய போதே இந்த அனர்த்தம் நேரிட்டது.

# ஐவரிக்கோஸ்ட் கிளர்ச்சியாளர் வசமுள்ள ஆயுதங்களைக் களையும் முயற்சி தோல்வி!

ஐவரிக்கோஸ்ட்டில் கிளர்ச்சியாளர்களிடமுள்ள ஆயுதங்களை களையும் முயற்சியில் தோல்வி ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக இன்[illegible] இடம்பெறவிருந்த செயற்பா[illegible]ள் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐவரிக் கோஸ்ட்டில் கிளர்ச்சியாளர்கள் அவர்களது ஆயுதங்களை கையளிக்க இணக்கம் தெரிவிக்காததால் கிளர்ச்சியாளர்களிடம் ஆயுதக்களைவு திட்டமிட்டபடி இன்று இடம் பெறமாட்டாதென்று அந்த நாட்டின் ஆயுதக்களைவு ஆணைக் குழு தெரிவிக்கிறது.

ஆயுதக் களைவுக்கான புதிய திகதி இன்னமும் அறி[illegible]க்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. மேற்காபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட்டில் 2002ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இடம் பெற்ற சதிப்புரட்சி முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து அங்கு உள்நாட்டு யுத்தம் நடைபெற்று வருகின்றது.

யுத்தத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

# கிரீஸ் சனாதிபதியாக கரமான்ஸ்லி தெரிவு 23 வருடங்களின் பின் ஆட்சி மாற்றம்

கிரிஸ் நாட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பழமைவாத சனநாயகக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதனையடுத்து பிரதமராக லோஸ்தா கரமான்ஸ்லி (வயது-48) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கடந்த 23 வருட கால சோஷலிச கட்சியின் ஆட்சி முடிவுக்கு [illegible]ுள்ளது.

கிரிஸில் நேற்[illegible] முன்தினம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சனநாயகக் கட்சியின் 300 ஆசனங்களில் 170ஐ கைப்பற்றிக் கொண்டன.

மேலும் 50 வயதுக்குக் குறைந்த பிரதமர் ஒருவர் கிரிஸில் பதவியேற்பது இதுவே முதற்தடவையாகும்.

இதேவேளை கிரிஸில் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளிற்கான ஆயத்தங்களை செய்வதே தனது முதல் பணியென்றும் இதன் பின்னதாக பணவீக்கம், வேலையில்லாப் பிரச்சினை, யூரோ நாணய அலகை உள்வாங்கல் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனப் பிரதமர் கரமான்ஸ்லி தெரிவித்துள்ளார்.



இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை வளர்க்கும் முகமாக கியூபா சனாதிபதி பிடல்காஸ்ரோ வியட்நாமுக்கு 5 நாள் உத்தியோகபூர்வ (மார்ச் 06) விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் ஜெனரல் றொங்டக்மா அவரை வரவேற்பதை படத்தில் காணலாம்.

## -பொடோ மறு ஆய்வுக் குழுவின்-

# அதிகாரத்தைப் பலவீனமாக்கும் தமிழக அரசின் முயற்சி தோல்வி

(சென்னை)

பொடோ மறு ஆய்வுக் குழுவுக்கு பொடோ வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உள்ளது என்பதை இந்தியஉச்ச நீதி மன்றம உறுதி செய்துள்ளது.

மறு மலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை.கோபால்சாமி, நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் மற்றும் தமிழகத்தில் இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டஏனையோர் மீதான பொடோ வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் மத்தியரசு நியமித்த பொடொ மறுஆய்வுக் குழுவிற்கு கிடையாது என்று கூறி தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது.

இதனை நேற்றுஉச்ச நீதி மன்றம் தள்ளுபடி செய்துள்ளது.



காஸாவில் நேற்று முன்தினம் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் காயமடைந்த பலஸ்தீனஒருவரை சிலர் தூக்கிச் செல்கின்றனர் இத்தாக்குதலில் 13பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக தற்போது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முபாரக் வாஷிங்டன் செல்வார் புஷ்சை சந்தித்துப் பேசத்திட்டம்

எகிப்திய சனாதிபதி கொஸ்னி முபாரக் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை சந்திப்பதற்காக அமெரிக்கா செல்லவுள்ளார்.

இந்தச் சந்திப்பு டெக்ஸாஸ் கிரோபோர்டில் அமைந்துள்ள புஷ்ஷின் பண்ணையில் ஏப்ரல் 12ஆம் திகதி இடம்பெறும்.

இதன்போது மத்திய கிழக்கிற்கான வாஷிங்டனின் சமாதானத் திட்டம், பயங்கர வாதம் மீதான அமெரிக்கப் போர், மத்திய கிழக்கில் சனநாயக மறுசீரமைப்பை மேற்கொள்ள அமெரிக்கா முன்வைத்துள்ள ஆலோசனைகள் குறித்து முபாரக் புஷ்ஷுடன் பேசுவார்.

மத்திய கிழக்கு அரசியல், பொருளாதார மறுசீரமைப்பு குறித்து வாஷிங்டன் தயாரித்துள்ள ஆட்சேபனைகளை முபாரக் ஏற்கனவே நிராகரித்துள்ளார். மத்திய கிழக்கில் பிரச்சினையைத் தீர்க்க அங்குள்ள மக்களுக்கு அரசியல் உரிமைகளை கொடுப்பதோடு வறுமை, வேலை வாய்ப்பின்மை என்பன தீர்க்கப்படவேண்டும் என வாஷிங்டன் கருதுகின்றது குறிப்பிடத்தக்கது.

# பறவைக் காய்ச்சல் நோயை மறைத்த தம்பதியர் டோக்கியோவில் தற்கொலை!

## -நோயால் இறந்த இரு காகங்கள் கண்டுபிடிப்பு

ஜப்பான் தலைநகர் டோக்கி யோவில் கோழிப்பண்ணை ஒன்றை நடத்திய முதலீட்டாளர் ஒருவரும் அவரது பாரியாரும் கோழிப் பண்ணையில் பறவைக் காய்ச் சல் நோய் பரவியதைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளனர். தமது பண்ணையில் பறவைக் காய்ச்சல் நோய் பரவியுள்ளதை அதிகாரிகளுக்கு இவர்கள் அறிவிக்கத் தவறியுள்ளனர் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. 1000 கோழிக் குஞ்சுகள் உட்பட 67,000 கோழிகள் அவரது பண்ணையில் இறந்துள்ளன.

இதேவேளை டோக்கியோ நகரில் இரு காகங்கள் இறந்துள்ளதாகவும் அவற்றுக்கு பறவைக்காய்ச்சல் நோய் இருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.ஒரு காகம் கோழிப்பண்ணைக்கு சமீபத்தில் இறந்து கிடந்த அதே சமயம் மற்றைய காகம் 5மைல் தூரத்தில் இறந்துகிடந்ததாக அறிவிக்கப்படுகிறது.இந்நோய் காரணமாக வியட்நாமிலும் தாய்லாந்திலும் இதுவரை 22பேர் இறந்துள்ளனர்.




# டெஸ்ட் தொடர் ஆரம்பம்............ ஷேன்வோர்ன்-முரளிதரன் பனிப்போர்

பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணிக்கும் கஷான் திலகரட்ண தலைமையிலான சிறிலங்கா அணிக்கும் இடையிலான டெஸ்ட்



தொடரின் முதலாவது போட்டி நேற்று காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

ஏற்கனவே ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியாவிடம் 3-2 என்ற நிலையில் இழந்த சிறிலங்கா மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரைக் கைப்பற்ற வேண்டிய நிர்ப்பந்தத் திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனை டெஸ்ட் அணித் தலைவரான திலகரட்ண எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதே இன்றைய கேள்வியாகவுள்ளது. ஏனெனில் ஒரு நாள் தொடரை இழந்தமை அணித் தலைவர் அத்தப் பத்துவின் தவறான வழி நடத்தலே காரணம் என கிரிக்கெட் வல்லுநர்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் சோர் வடைந்துள்ள ரசிகாகள் டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர்பார்த் துள்ளனர்.

இதேவேளை வெல்ல முடியா அணியாக உலக அரங்கில் வலம்வரும் அவுஸ்திரேலிய அணி சிறிலங்காவுடனான ஒரு நாள் தொடரை கைப்பற் றிய போதும் இரண்டு போட்டிகளில் சிறிலங்கா அணி வெற்றி பெற்றமை அவ் அணியில் தாக்கத்தை ஏற்படுத்தி



யுள்ளதுடன் டெஸ்ட் தொடர் கடுமையானதாக இருக்கும் என்பதை உணர்த்தியுள்ளது.

ஏனெனில் ஒருநாள் போட்டியில் அவ் அணியால் அதிகபட் சமாக 262 ஓட்டங்களை மாத் திரம் பெறமுடிந்ததுடன் ஒரு போட்டியில் 50 ஓவர் நிறைவில் 198 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதில் இருந்து சிறிலங்காவின் பந்துவீச்சுவரிசை பலமானதாக இருக்கின்றது என்பது தெளிவான நிலையில் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வரிசையில் எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பாகும்.

காலியில் இதுவரை நடைபெற்றுள்ள ஒன்பது டெஸ்ட் போட்டிகளில் சிறிலங்கா அணி ஆறு வெற்றிகளையும், ஒரு தோல்வியையும் இரண்டு சம நிலை முடிவுகளையும் பெற்றுள்ளது. 1999ஆம் ஆண்டு இம் மைதானத்தில் இடம்பெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டிவெற்றி தோல்வியின்றி முடிவடைந்தமை குறிப் பிடத்தக்கது.

1984 முதல் முதற் தரப் போட்டிகள் நடாத்தப்பட்டு வந்த இம்மைதானத்தில் 1997/98 காலப் பகுதியில் இருந்து சர்வதேச டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகின்றது. சிறிலங்கா நியூசிலாந்து அணிகள் இம் மைதானத்தில் முதல் போட்டியில் கலந்து கொண்டன.

சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ள இம்மைதானத்தில் கூடுதலான விக்கெட்டுக்களை முரளிதரனே கைப்பற்றியுள்ளார், இம்முறையும் முரளிதரன் சவாலாக விளங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது இவ்வாறிருக்க ஓர் ஆண்டு தடைக்குப் பின்னர் முதன் முறையாக சுழற்பந்து வீச்சாளர் ஷேன்வோர்ன் பங்கேற்கும் சர்வதேசப் போட்டியாக இது இருப்பதால் அவருக்கும் முரளிதரனுக்கும் இடையே கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை 491 விக்கெட்டுக்களை ஷேன்வோர்னும், 485 விக்கெட்டுக்களை முரளிதரனும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் டெஸ்ட் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிதாகப் பதவியேற்ற பொண்டிங்கிற்கு சிறிலங்காவுடனான போட்டி முதலாவது போட்டியாக அமைவதும், மற்றும் ஒருநாள் போட்டியில் திறமையாகச் செயற்பட்ட அன்ரூ சைமனுக்கு இப்போட்டி முதல் போட்டியாக அமைவதால் போட்டித் தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது.

இது இவ்வாறிருக்க மிகவும் பலவீனமான நிலையிலுள்ள சிறிலங்காவின் ஆரம்ப துடுப்பாட்ட வரிசை டெஸ்ட் போட்டியில் பிரகாசிக்கத் தவறுமாயின் அதனை சாதகமாக அவுஸ்திரேலியா பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு பிரகாசமாகவே உள்ளது.

அத்துடன், இப்போட்டித் தொடரின் பெறுபேறு சிறிலங்கா அணியில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். குறிப்பாக கஷான் திலகரட்ணவின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாக இருக்கும் என்பது உறுதி.

# வரலாறு காணாத பாதுகாப்பு



இந்திய கிரிக்கெட் வீரர்கள் பாகிஸ்தானுக்கு நாளை செல்லவுள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பாகிஸ்தான் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெட் அணி நாளை பாகிஸ்தான் செல்கின்றது. 40 நாட்கள்தங்கியிருக்கப்போகும் பாகிஸ்தான் அணிக்கு வரலாறுகாணாத பாதுகாப்பு ஏற்பாடுகளை பாகிஸ்தான் மேற் கொள்கின்றது. அப்பாதுகாப்பு நடவடிக்கைகள் வருமாறு;

ஆட்டம்தொடர்வதற்கு ஒரு மணிநேரம் முன்பாகவே ரசிகர்களை உள்ளே அனுப்பி அரங்கத்தின் வாசல்களை மூடி விடுவது. அதற்கு பிறகு யார் வந்தாலும் உள்ளே அனுமதிப்ப தில்லை.

☐ ஆட்டம் நடக்கும் அன்று யாருக்கும் டிக்கட் விற்பனை கிடையாது.

☐ போட்டிநடக்கும் போது அரங்கத்தை சுற்றி குறிப்பாக அரங்கத்தின் வாசல்களில் எந்த சூழலையும் சமாளிக்கும் விதத்தில் அதிரடிப்படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பர்.

☐ போட்டி நடந்து கொண்டிருக்கும் போது மைதானத்திற்குள் சிறப்புப் பயிற்சி பெற்ற கொமாண்டோக்கள் தயார் நிலையில் குவித்து வைக்கப்பட்டிருப்பர்.

☐ மோப்ப நாய்களுடன் வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள் மைதானத்தில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வர்.

☐ இந்திய வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில இருந்து மைதானத்துக்கு வரும் வழியில் சாலையில் போக்குவரத்தை தற்காலிகமாக நிறுத்தி வை த்தல், வீதியில் பொலிசாரை நிறுத்திவைத்தல் இந்திய வீரர்கள் பயணம் செய்யும் வாகனத்துக்கு முன்னும் பின்னும் பாதுகாப்புகொமாண்டோ வாகனங்கள் அணிவகுத்து செல்லும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சச்சினுக்கு வாழ்த்து



இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழும் சச்சின், டெண்டுல்கருக்கு உலகம் முழுவதும் ரசிகர்,ரசிகைகள் உள்ளனர். இதில் பிரபலங்களும் மிஞ்சவில்லை.

டெண்டுல்கரின் ரசிகைகள் பட்டியலில் சமீபத்தில் ஒரு பிரபலம் இடம் பிடித்துள்ளார்- அவர்-மார்டினா நவரத்திலோவா. பிரபல அமெரிக்க டென்னில் வீராங்கனையான இவர் கிரிக்கெட் ரசிகரும் கூட. குறிப்பாகஸ்ரீவ்வோ, சச்சின் டெண்டுகர், லக்ஸ்மன் ஆகியோரது ஆட்டம் இவரை வெகுவாகக் கவர்ந்துள்ளது.

அவுஸ்திரேலிய ஓப்பன் டென்னிஸ்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக மெல்போர்னில் தங்கியிருந்த போது அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியை காணக்கிடைத்தது.

இதன் போது கிரிக்கெட் ரசிகையான மார்டினாவுக்கு சச்சின், லக்ஸ்மன் ஆட்டங்கள் ரொம்பவும் பிடித்துவிட்டது. உடனே சச்சினுக்கு ஒரு பரிசும் வாழ்த்துச் செய்தியும் அனுப்பிவைத்தார் மார்டினா. டென்னிஸ் வீரர்கள் அணியும் தொப்பியும் அன்பு சச்சின் தொடர்ந்து ஓட்டம் குவிக்கும் வகையில் சிறப்பாக விளையாட வாழ்த்துகிறேன் எனவும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதனை மனப்பூர்வமாக ஏற்றுள்ள சச்சின், மார்டினாவின் வாழ்த்தும் பரிசும் மறக்கமுடியாதது எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது டென்னிஸ் வீராங்கனைகளில் வயதில் முதிர்ந்தவரான மார்டினா அதிக கிராம்ஸ்லாம் பட்டங்களை வென்றவர்என்ற சாதனை படைத்துள்ளதுடன் அண்மைக்காலமாக இந்தியாவின் டென்னிஸ் வீரர் லியாண்டர் பயசுடன் இணைந்து இரட்டையர் ஆட்டங்களில் விளையாடி வருகின்றார்.

# முரளிதரன் அபாரம்; அவுஸ்திரேலியா 220 ஓட்டங்களுடன் சுருண்டது

அவுஸ்திரேலிய, சிறிலங்கா அணிகளுக்கிடையில் காலியில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது சிறிலங்கா ஒரு விக்கெட்டை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக தனது முதலாவது இனிங்சில் அவுஸ்திரேலியா 68.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லெகுமன் 63 ஓட்டங்களையும், ஹெட்டன், மாட்டின் 41, 43 ஓட்டங்களையும் முறையே பெற்றனர்.

பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் 491 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஷேன் வோர்னை சமன் செய்தார்.

சனத் ஜெயசூரியா 35 ஓட்டங்களுடன் ஷேன் வோர்னின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தார். ஆட்டம் இன்று தொடரும்.

# தனது கட்சி அழிந்துவிடுமென அஞ்சி

# ஜே.வி.பி.யுடனான கூட்டை நிராகரித்த சிறிமாவோ

உப்புல் ஜோசப்பெர்னாந்து
(லங்காதீப)
மொழியாக்கம்: சக்திவேல்.

1988 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.யினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிடம் சனநாயக மக்கள் இயக்கம் என்ற பெயரில் புதிய கட்சியினை ஆரம்பித்து ஐக்கிய தேசியக் கட்சியை சனாதிபதித் தேர்தலில் வென்றுவிட முடியும் என அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் கூறினார். இந்தக் கூட்டு ஒப்பந்தத்திற்கு தரகர் வேலை பார்த்தவர் அம்மையாரின் திருக்குமாரன் அநுராபண்டாரநாயக்க ஆவார். சனாதிபதி தேர்தலில் சிறிமா அம்மையார் வெற்றி பெறவேண்டுமானால் ஜே.வி.பி.ஆதரவு கட்டாயம் தேவை. அவர்களுக்கு மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கவேண்டும் என தாயார் சிறிமாவுக்கு அறிவுரைகள் வழங்கினார். இதனால் தென்பகுதியில் ஜே.வி.பி. ஆதரவுள்ள மாவட்டங்களில் வாக்குகளைப் பெறுவதற்காக ஜே.விபி.யினர் முழுமூச்சுடன் தேர்தல் பிரச்சாரங்களிலும் ஈடுபடுவர் என்று கூறினார். ஆனால், சிறிமா அம்மையார் ஜே.வி.பி.யை இணைத்துக்கொண்டால் என்றாவது ஒருநாள் நமது கட்சி இல்லாமல் போய்விடும் என்ற தூரநோக்குடன் சிந்தித்து ஜே.வி.பி.யின் கபட நாடகத்தை உணர்ந்து கூட்டுறவு ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டார். இந்த ஜே.வி.பி.யினருடனான கூட்டு ஒப்பந்தத்திற்கு சிறிமா அம்மையாரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கம் வகித்த ஏனைய கட்சியினர்களும் பயந்தனர். சிறிமா அம்மையாரின் துரித நடவடிக்கையால் அன்று கட்சி சாகாமல் பிழைத்தது. பின் ஜே.வி.பி.யிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியைக் காப்பாற்ற வேண்டுமென குழு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியை விரட்டியடிக்க வேண்டும். அதற்கு சிறிமாவின் கரங்களைப் பலப்படுத்தி மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை ஆட்சிப்பீடம் ஏற்றவைப் போம். ஜே.வி.பி.யினருக்கு முறையான பாடங்களைக் கற்பிக்கப்போகிறோம். எமது கட்சியை கொலைகார ஜே.வி.பி. கும்பலிடமிருந்து காப்பாற்ற வேண்டும். நாங்கள் பிரதேச மட்டத்தில் எமது கட்சியின் சார்பில் அமைப்பாளர்களை நியமிக்கும் பொழுது ஜே.வி.பி.யினர் தமது கட்சிக்கு எதிராக அவர்களும் அமைப்பாளர்களை நியமிக்கத் தொடங்கியுள்ளார்கள் என சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் கூறினார்கள். எமது கட்சியினரின் இளைஞர் அமைப்பு, மாணவர் அமைப்பு மற்றும் தொழிற் சங்கங்களில் இலகுவாக ஜே.வி.பி.யினர் நுழைந்துவிடுவார்கள். சிறுபான்மையினர்களின் ஆதரவுகள் எமக்கு கிடைக்காமல் செய்துவிடுவார்கள். சிறுபான்மையினரின் செல்வாக்குகள் இல்லாதொழித்துவிடுவார்கள். இந்தக்கொலைகாரக் கும்பல்களின் உறவுகள் தேவைப்படாது என அன்றைய இடதுசாரிகளான கம்யூனிஸ்ட் கட்சி 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி 'அத்த' பத்திரிகையில் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அப்பொழுது சிறிமாவோ அம்மையாரிடம் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு எமது கட்சியின் ஆதரவுகள் தேவையென்றால் எமக்கு அமைச்சரவையில் மூன்று அமைச்சுக்களின் பதவிகள் தேவை என ஜே.வி.பி. வலியுறுத்தியது. அவர்கள் கேட்ட பதவிகளில் முக்கியமாக பாதுகாப்பு அமைச்சும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இதை அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முற்றாக நிராகரித்தார். அதனால் ஜே.வி.பி. யுடன் ஏற்படுத்திய ஒப்பந்தம் முறிவடைந்தது.சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என ஜே.வி.பி.யினர் சிறிமாவை எச்சரிக்கை செய்தனர்.அவரைக் கொலை செய்வதற்கும் திட்டங்கள் தீட்டியிருந்தனர். ஒருமுறை அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் மேடையில் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவரைநோக்கி ஜே.வி.பி.யினர் கைக்குண்டு ஒன்றை எறிந்தனர். அது வெடிக்கவில்லை. அது வெடித்திருந்தால் சிறிமாவோ அன்று மரணித்திருப்பார். அந்நிலையில் 1988ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தனக்குப் பாதுகாப்பு வழங்கும்படி ஜே.ஆர். ஜெயவர்தனாவை சிறிமாவோ அம்மையார் கேட்டிருந்தார். பின் ஜே.வி.பி.யினர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரை கூட்டு முறிவடைந்த பின் 1988ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி சனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு நாட்டுமக்களுக்கு அறிக்கை ஒன்றினை பத்திரிகை மூலமாக வெளியிட்டனர்.

அதில் ராஜிவ்காந்தி-ஜே.ஆர்., பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளனர். எனவே நாட்டையும், மதத்தையும், மக்களையும் காப்பாற்றுவதற்கு சிறிமாவின் தலைமையின் கீழ் ஒன்றுபடுங்கள். இல்லையேல் நாட்டை பறிகொடுக்க நேரிடும் என்று சிறிமாவுக்கும் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும் ஆதரவாக அறிவித்திருந்தார்கள். அதாவது 1971ஆம் ஆண்டு ஏப்பிரல்கிளர்ச்சியின் பொழுது ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்று குவித்த சிறிமாவோ பண்டாரநாயக்கவை ஆதரிக்க வேண்டுமென ஜே.வி.பி. அறிக்கைவிட்டது. கிளர்ச்சியில் உயிர் நீத்தவர்களை மறந்தனர்.


அவர்களின் தியாகங்களை செல்லாக் காசாக மதித்தனர். இதை இந்நாட்டு மக்கள் மறக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடத்துக்கு ஆரம்பகாலம் தொட்டு ஜே.வி.பி.யினர் எதிர்ப்புக்களையே தெரிவித்து வந்தனர்.

இதன் பிறகு சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மகன் அனுராவும் தம்பி அனுருத்தரத்வத்தையும் இந்திய உயர் ஸ்தானிகர் டிக்சிற்றுடன் இரகசிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை நாட்டின் சனாதிபதியாக்காமல் சிறிமாவை சனாதிபதியாக்குவதற்கு இந்தியாவின் உதவியைக் கேட்டிருந்தார்கள். ஆனால் அதற்கு டிக்சிற் உடன்படவில்லை.

ஒருதடவை கெக்கிராவில் நடந்த கூட்டம் ஒன்றில் சிறிமா அம்மையாரின் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான மைத்திரிபால சேனநாயக்க தனது ஆதரவாளர் ஒருவருடன் நாங்கள் ஜே.வி.பி.யுடன் கூட்டுவைத்திருந்தாலும் அது பெயரளவில் மட்டுமே, செயலில் காண்பிக்கமாட்டோம் என்று கூறியதை ஜே.வி.பியின் ஆதரவாளர் ஒருவர் கேட்டுக்கொண்டிருந்தார். இந்த சம்பவத்தை அவர்கள் ஜே.வி.பி.யினருக்கு அறிவித்தனர். இதன் பிறகு வெள்ளவாயா தொகுதி சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் ஒருமுறை நாங்கள் ஜே.வி.பி.யினரை ஏமாற்றி அவர்களின் தோள்கள் மீது ஏறி சவாரிசெய்து அவர்களை நாட்டிலிருந்து இல்லாதொழித்து ஆட்சியைக் கைப்பற்றுவோம் எனக் கூறினார். ஆனால் அன்றைய கம்பகா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்கவும் சிறிமாவின் மூத்த மகள் சுனேத்திராவும், ஜே.ஆர். ஜெயவர்த்தனா மூலமாக நாட்டில் ஜே.வி.பி.யைஇல்லாதொழிக்கவேண்டும் எனக் கூறினர்.

இந்நிலையில் ஜே.வி.பி.யினர் பல புதிய திட்டங்களையெல்லாம் சிறிமா அம்மையாரிடம் சமர்ப்பித்தனர். ஆனால் அவர் எதற்கும் விட்டுக்கொடுக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியை மாயவலையில் சிக்க வைக்க ஜே.வி.பி.யினர் முயற்சிசெய்கின்றனர் என்பதை உணர்ந்து அவர்களின் திட்டங்கள் யாவையும் நிராகரித்தார். இந்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தால் சனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியை எப்படியாவது தோல்வியடையச் செய்ய வேண்டுமென ஜெ.வி.பி.யினர் முயற்சிகள் மேற்கொண்டனர்.

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்களுக்கு முன்னதாக அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாருக்கு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிப்பதற்கு கூட்டுச் சேருவோம் என கடிதம் எழுதினார். அதையும் முற்றாக சிறிமாவோ நிராகரித்து கட்சியைக் காப்பாற்றினார். இது அவரின் அருமை மகள் சந்திரிகாவுக்கும் தெரியும். ஆயிரக்கணக்கான எமது ஆதரவாளர்களைக் கொன்று குவித்த கொலைக்கார ஜே.வி.பி. கும்பலின் உதவிகள் எமக்குத் தேவைப்படாது எனக் கூறிய சந்திரிகா அவர்கள் இப்பொழுது அவர்களுடன் கூட்டு ஏற்படுத்தி ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ளனர். இந்தப் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி.யினர் 35 ஆசனங்களைக் கைப்பற்றினால். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பீடத்தை நியமிக்கும் பலத்தையும் ஜே.வி.பி. யினர் பெறுவார்கள். ஆனால் ஜே.வி.பி.யிலிருக்கும் இளைஞர்களுக்கு இவைகளை செய்யக் கூடிய சக்தி உண்டா? சென்ற தேர்தலில் நான்கு லட்சம் வாக்குகளைப் பெற்ற ஜே.வி.பி.யினர் இம்முறை பொதுத் தேர்தலில் பத்துலட்சம் வாக்குகளைப் பெற்றால், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரையும் சனாதிபதியையும் உள்ளங்கையில் நிறுத்தி ஆட்டத் தொடங்கிவிடுவார்கள். இவ்வாறு வெற்றி ஏற்பட்டால் அது விமல் வீரவன்சவை ஒருபடி மேலே உயர்த்திவிடும்.



# இந்தியப் படையினர் தாக்குதலை நடத்தி எம்மில் மூவரை பிடித்துச் சென்றனர்

## - தப்பிவந்த மீனவர் கேதீஸ் தெரிவிப்பு

(மன்னார்)

தாயக எல்லைக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளை இந்திய கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதோடு எம்மில் மூவரைப் பிடித்துச் சென்றனர் என இச்சம்பவத்தை நேரில் பார்த்த கேதீஸ் என்பவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளியன்று முற்பகல் 11 மணியளவில் தலைமன்னார் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் மூவர் இந்தியப் படையினரால் பிடித்துச் சொல்லப் பட்டமை குறித்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தலைமன்னாரைச் சேர்ந்த நெல்ஷன் சத்தியராஜ், சங்கர் ஆகியோரே கைது செய்யப்பட்டனர்.

அவ்வேளை இந்திய ஆகாயப் படையைச் சேர்ந்த உலங்கு வானூர்தியும் தாழப்பறந்து வட்டமிட்டது. நாங்கள் எமது தாயக எல்லைப் பகுதிக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம், அச்சமயம் இந்தியக் கடற்படையினர் வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து எம்மை தாக்கமுற்பட்டு பயமுறுத்தினர், நான் உடனே எனது படகு சற்றுத் தூரத்தில் நின்றமையினால் சுலபமாக வந்து விட்டேன் என அவர் கூறினார். (மி)

# தெளிவான அரசியல் தலைமையை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்

## -ம.ம. முன்னணி அழைப்பு

(கொழும்பு)

மலையக மக்கள் தனித்துவத்தைப் பேணி தமக்கென ஒரு தெளிவான அரசியல் தலைமையை தேர்ந்தெடுப்பதன் மூலமே மலையக மக்களின்வாழ்வும் வளமும் மேம்பாடடையும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திர சேகரன் தெரிவித்துள்ளார். காலம் காலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் அடிமைத் தனத்தில் சிக்கிக் கொண்டுள்ள இந்திய வம்சாவழி மக்கள் தமக்கென தனித்துவமான அரசியலை கட்டியெழுப்ப வேண்டுமென கூறியுள்ளார்.

# தொண்டமனாறு நீரேரியில் கடற்படை காவல் கடமை

வடமராட்சி தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதிகளில் ஏராளமான கடற்படையினர் குவிக்கப்பட்டுக் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேற்படி நீரேரியில் மீன்பிடிக்கப் படையினர் தடைவிதித்திருந்ததால் அப்பகுதிக் கடற்றொழிலாளர்களுக்கும் கடற்படையினருக்குமிடையே ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து இங்கு தொழில் செய்வதற்கான அனுமதியைப் படைத்தரப்பு கடந்த வாரம் வழங்கியிருந்தது. எனினும் அங்கு மீன்பிடிக்கச் செல்வோரைக் கண்காணிப்பதற்கென பெருந்தொகை கடற்படைத் துருப்புக்கள் இங்கு குவிக்கப்பட்டு காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். (33)

# யாழ். நகர அச்சகங்களில் பொலிசார் திடீர் சோதனை

யாழ். நகரிலுள்ள அச்சகங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு யாழ் குடாநாடெங்கிலும் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. இதற்காக ஓரிரு கட்சியினரும் சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறு சுவரொட்டிப் பிரசாரங்களைச் செய்வது தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக அமைந்துள்ளது. எனவே இவ் வாறான சுவரொட்டிகளைஅச்சிடும் அச்சகர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவே இந்த திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சுவரொட்டிகளை வைத்திருந்தவர்கள் என்ற பெயரில் இதுவரை 16 பேர் யாழ் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமையும் இவர்கள் யாவரும் ஈ.பி.டி. பி.யினர் மற்றும் ஆனந்த சங்கரியின் சுயேட்சைக்குழுவின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம்; சர்வதேசத்திற்கு இதனைத் தேர்தலில் உணர்த்துவோம்

## கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

**"பேரினவாத குடியேற்றத்திட்டங்களுக்கு மத்தியிலும் வடக்கு கிழக்கு மாகாணம் தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கு மாகாணத்தின் 31 பாராளுமன்ற ஆசனங்களில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைத் தமிழ் தேசியக்கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தலில் பெறவேண்டும். தமிழ்பேசும் வாக்காளர்கள் இதனை மனதில் இருத்தித் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும்" என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.**

திருகோணமலை பிரதான வீதியில் நேற்று முன்தினம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாவட்டத்தேர்தல் செயலகம் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் இந்துக் கலாச்சார மண்டபத்தில் தேர்தல் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. செயலகத்திறப்பு விழாவுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர் கோ.மாதவராசாவும் கலந்துரையாடலுக்கு ஆர்.யோகரட்ணமும் தலைமைவகித்தனர்.

இருநிகழ்வுகளிலும் கலந்து கொண்டு இரா.சம்பந்தன் பேசினார். வேட்பாளர்களான க.துரைரட்ண சிங்கம், சதா.சண்முகநாதன், எஸ்.கௌரிமுகுந்தன், வ.விக்கினேஸ்வரனும் பங்கு பற்றிப்பேசினார்கள்.

சம்பந்தன் தொடர்ந்து பேசுகையில்; "ஐக்கியதேசிய முன்னணி அரசிடம் இருந்து யுத்த நிறுத்த அமுலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களை சனாதிபதி பறித்தெடுத்ததிற்கும் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு உத்தரவிட்டதற்கும் ஒரே ஒருகாரணமாக அமைந்தது விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைத்திட்டமே ஆகும். விடுதலைப்புலிகள் எங்கே இடைக்கால யோசனைத் திட்டத்தைச்சமர்ப்பிக்கப்போகின்றார்கள் என்று சனாதிபதியும் மற்றும் பேரினவாத சக்திகளும் எண்ணி இருந்தனர். அதற்கு மாறாக விடுதலைப்புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைகால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை பேரினவாத சக்திகளினால் ஜீரணிக்கமுடியவில்லை. அதன்விளைவுதான் அமைச்சுப் பதவி பறிப்பாகும்" என்று தெரிவித்தார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்கியே ஆகவேண்டும். என்பதை ஆளும் கட்சிக்கும் சர்வதேச சமூகத்துக்கும் உணர்த்துவதற்கு எதிர்வரும் தேர்தலை தமிழ் பேசும் வாக்காளர்கள் சர்வசன வாக்கெடுப்பதாகக் கருதவேண்டும். எதிர்வரும் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளும் அறுதிப்பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலை ஏற்படும் என்பதே அவதானிகளின் கருத்து. யார் ஆட்சியமைக்கப் போகின்றார்கள் என்பதை தமிழ் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மூலம் தீர்மானிக்கப்போகின்றார்கள். இதற்கான பாதையை விடுதலைப்புலிகள் தமிழ்மக்களுக்குக் காட்டியுள்ளார்கள் என்றும் சம்பந்தன் கூறினார்.

தமிழ் பேசும் வாக்காளர்கள் ஒற்றுமையாக செயற்படவேண்டிய காலகட்டம் இதுவாகும். விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைத்திட்டத்தை பரிபூரணமாக ஆதரிக்கின்றோம் என்பதைத் தமிழ்பேசும் வாக்காளர்கள் எதிர்வரும் தேர்தலை தமிழ்த தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து உலகுக்கு எடுத்துகாட்ட வேண்டும் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க. கண்டனம்

உதவிப் பொலிஸ்மா அதிபரும் சனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகருமான விக்டர் பெரேராவை நுவரெலியா, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு தேர்தல் பாதுகாப்பு சம்பந்தமாக நியமித்திருப்பதைவன்மையாகஎதிர்க்கின்றோம என ஐக்கிய தேசிய முன்னணியின் செயலாளர் சென‌ரத் கப்புகொட்டுவ தெரிவித்துள்ளார்.

# இராணுவ வாகனங்களில் ஈ.பி.டி.பி தேர்தல் பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி.யினரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக இராணுவ வாகனங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை யாழ்ப்பாணத்தில் காணமுடிகிறது.

தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முரணாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் மேற்படி தேசவிரோதிகள் போட்டியிடுகின்றனர். இதனால் இவர்களுடைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தஅவற்றின்உரிமையாளர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதனால் இராணுவ வாகனங்களில் ஒலி பெருக்கிகள் பதாகைகள் என்பவற்றைப் பொருத்தி இவர்கள் தம் பிரச்சாரநடவடிக்கைகளில ஈடுபட்டுள்ளனர்.

படையினருடன் இணைந்து இவர்கள் செயற்படுவது மக்களுடைய இயல்பு வாழ்வில் பாதிப்பையும் பீதியையும் உருவாக்கி வருகின்றது. இவர்களின் அச்சுறுத்தும் விதமான இந்த நடவடிக்கைகள் குறித்து மக்கள் ஆட்சேபம் வெளியிட்டுள்ளனர். (33)

# இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி

(வட்டக்கச்சி)

இராமநாதபுரம் ம.வி இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டி கடந்த 1 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை முதல்வர் இராஜமகேந்திரம் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக க.ம.பத்மநாதன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர் திட்டமிடல்) சிறப்பு விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச உபபணிமனை அலுவலர் சி.தண்டாயுதபாணி,வி. சிற்றம்பலம் (கோட்டக்கல்வி பணிமனை கரைச்சி) ஆகியோர் கலந்து கொண்டனர். மங்கல விளக்கினை சிறப்பு விருந்தினரும் பிரதம விருந்தினரும், ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியினை வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி ஏற்றி வைத்தார். 694 புள்ளிகளைப் பெற்று பச்சை இல்லம் முதலிடத்தையும், 659 புள்ளிகளைப் பெற்று சிகப்பு இல்லம் 2ம் இடத்தையும், 603 புள்ளிகளைப் பெற்று மஞ்சள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன. (12)

# சந்திரிகாவின் அறிவிப்பால் உலக வங்கி விசனம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் வேலையற்றோருக்கு 60,000 வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுமென்ற சனாதிபதி சந்திரிகாவின் தேர்தல் பிரசாரம்மிகவும் சிக்கலான தாக்கத்தை உலக வங்கிக்கு கொடுத்துள்ளது. கடந்த சிலவருடங்களாக வேலைவாய்ப்பு சம்பந்தமாக அரசாங்கத்துடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் சனாதிபதியின் கூற்று தெளிவற்றதொன்று என உலக வங்கி தெரிவித்துள்ளது.

# தமிழரின் அபிலாசையை உலகறியச் செய்ய ஒன்றுபட்டு கூட்டமைப்புடன் இணைக!

## -வடமராட்சி மீனவர் சமூகம் அறைகூவல்

(வடமராட்சி)

எதிர்வரும் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்காக யாழ் குடாநாட்டு மீனவர் சமூகத்தினர் அனைவரும் ஓரணியில் திரளவேண்டுமென வடமராட்சி மீனவர் சமூகம் அறைகூவல் விடுத்துள்ளது.

இலங்கையின் தேர்தல்களை நீண்ட காலங்களாக பகிஷ்கரித்து வந்ததமிழினம் இன்று காலத்தின் தேவையை உணர்ந்து வரும் தேர்தலுக்கு முகம் கொடுக்கத்தயாராகி வருகின்றது. இதற்காக எதிர்வரும் தேர்தலில் தமிழ்மக்களின் அபிலாசைகளை உலகறியச் செய்யும் நோக்குடன் தமிழினம் கூட்டமைப்புடன் இணைந்து இத்தேர்தலை எதிர்கொள்கிறது.

எனவே யாழ் மாவட்டத்தில் உள்ள மீனவர் சமூகத்தினர் அனைவரும் உலகமே உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தேர்தலை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இதனால் அனைத்து மீனவ சமூகத்தினரும் இணைந்து தமிழ் மக்களின் ஏகோபித்த மன உணர்வுகளையும் அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்த முன்வரவேண்டுமென இவ்வமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது. (33)

# இந்தியப்படகோட்டிகள் மீது வழக்குகளை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய படகோட்டிகள் மீது வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையை சட்டமா அதிபர் திணைக்களம் துரிதப்படுத்தியுள்ளது.

தமது விடுதலையை துரிதப்படுத்தக்கோரி, யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 67 இந்திய மீன்பிடிப் படகுகளது ஓட்டிகளும் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டமொன்றை அண்மையில் நடத்தியிருந்தனர். எனினும் இந்தியப் தூதுவராலய பிரதிநிதிகள் நேரில் சந்தித்து வழங்கிய உறுதி மொழிகளையடுத்து தமது போராட்டத்தை அவர்கள் தற்காலிகமாக விலக்கிக்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே மேலும் 12 இந்திய மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகள் மீது யாழ். மேல் நீதிமன்றில் கடந்த வெள்ளி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் காங்கேசன் துறை மற்றும் தீவகக் கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை பிடிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளின் ஓட்டிகளில் 15பேர் மீது யாழ். மேல் நீதிமன்றில் ஏற்கனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் இடம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)


## கண்ணீர் அஞ்சலி

கிளி/ கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அலுவலக உதவியாளர் திரு. பா. மாயன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி

**பாலசுப்பிரமணியம் நாகேஸ்வரி**

அவர்கள் 2004. 03. 07ஞாயிற்றுக்கிழமை காலமானார். அவரின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரிய நலன்புரிச் சங்கம்,
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி,
கிளி நொச்சி.

அதிபர்,ஆசிரியர்கள்,
பணியாளர்கள்,பாடசாலை சமூகம்.

(3541)



## 1ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
09
12
1978



தாயக மண்ணில்
10
03
2003

2nd லெப்
**சீட்டன்**

கருணானந்தம் சர்வானந்தம்
கள்ளப்பாடு வடக்கு முல்லைத்தீவு

*தாயக மண்ணுக்காய்*
*தரணியில் உதித்தவனே*
*தாயவள் சோகமதைத் தீர்த்திடவே*
*தானைத் தலைவன் வழிதனிலே சென்றாய்*
*மாவீரனாகி உன்பணி முடித்திட்டாய்*
*உன் நினைவுகள் தொடர்ந்திடவே*

நாளை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் உற்றார்,உறவினர், சக நண்பர்கள்,போராளிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

(4055)



**சிந்தனைக்கு**

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை, கிளிநொச்சி. 09-03-2004


## ஏன் செய்யவில்லை!

கருணா தமிழீழத்தேசியத்தலைவருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவர். நம்பிக்கைக்கும் பாத்திரமாகவும் இருந்தவர். அதுமட்டுமல்ல தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களிடம் இருந்து ஏனைய தளபதிகள், பொறுப்பாளர்கள் ஆகியோரைவிட அதிகபட்ச அதிகாரங்களையும் பெற்றுக்கொண்டிருந்தவர். இவ்வாறாக தலைமையுடன் நெருக்கமான உறவையும், தொடர்பையும் கொண்டிருந்த கருணா கிழக்கிற்கு அதிக பிரதிநிதித்துவத்தை ஏன்தலைவரிடம் கேட்டுப்பெற்றுக்கொள்ளவில்லை.

அதுமட்டுமல்ல, அவ்வாறு பேசித்தீர்வு காணமுடியாது என்ற முடிவிற்கு கருணா வருவதற்கு இத்தகைய கோரிக்கைகள் எதுவும் இதற்கு முன்னர் கருணாவினால் முன்வைக்கப்பட்டு தலைவரினால் நிராகரிக்கப்பட்டதுண்டா? அன்றி வேறுயாராவது இத்தகைய கோரிக்கையை முன்வைத்த போது அதுதேசியத்தலைவரினால் நிராகரிக்கப்பட்டதாகவோ அன்றி கருத்திற்கொள்ளப் படாமலோ விடப்பட்டது என கருணாவிற்கு ஏதாவது தகவல் தான் கிடைத்ததுண்டா?

சரி தலைவருடன் நேரடியாக தனது இக்கோரிக்கைகளை முன்வைக்கவிரும்பவில்லையென எண்ணியிருப்பின் ஏனைய தளபதிகளையாவது அனுப்பி தலைவரிடம் இக்கோரிக்கையை முன்வைத்திருக்கலாமல்லவா? தற்பொழுது மட்டு- அம்பாறை மக்களின் உணர்வுகளையே தாம் பிரதிபலிப்பதாகக் கூறும் கருணா, மக்களின் உணர்வுகள் இவ்வாறிருக்கின்றன அதற்குத் தீர்வு காணப்படுதல் வேண்டும் என தனது தளபதிகளிடம் விடயத்தைக்கூறியாவது தலைவரிடம் அனுப்பி வைத்திருக்கலாமல்லவா?

செய்திஊடகங்கள் மூலம் தனித்துச்செயற்படப்போவதாக அறிவிப்புச் செய்துவிட்டு, தனது துரோகத்தனமான செயற்பாட்டிற்கு பிரதேச வாதத்தைக் கிளப்புவதும், மக்களை பகடைக் காய்களாகவும் போராளிகளையும் பலிக்கடாக்கள் ஆக்கும் எந்தவகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதும் எப்படி ஏற்புடையதாக இருக்க முடியும்? இது கருணா விடுதலைப்புலிகளுக்கு செய்த துரோகமாக மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கும் செய்த துரோகமாகக் கொள்ளாது வேறுஎவ்வாறு கொள்ள முடியும்?

இது ஒருபுறம் இருக்க அண்மைக்காலத்தில் தலைவர் பிரபாகரனால் அழைக்கப்பட்டும் வன்னிக்குச் செல்ல கருணா தயாராய இருக்கவில்லை. இதனை அவரே ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். தான் வன்னிக்குச் சென்றிருப்பின் தடுத்துவைக்கப்பட்டிருக்கலாம் என அவர் சந்தேகம் எழுப்புகின்றார். இதில் உள்ள முக்கியமான வினா என்னவெனில் அவர் அத்தகைய முடிவிற்கோ சந்தேகம் கொள்வதற்கோ காரணம் என்ன?

அதாவது தலைவர் பிரபாகரன் அவர்களுடன் தனக்கு ஏற்கனவே முரண்பாடு இருந்ததாக அவரே கூறவில்லை. தலைவர் பிரபாகரன் இவரின் செயற்பாடுகள் எவற்றிக்கும் முட்டுக்கட்டை போடவும் இல்லை. அவரை கட்டுப்படுத்தும் வகையில் அறிவிப்புக்கள் எதையும் விடுக்கவுமில்லை. அவரின் பொறுப்புக்கள், பதவிகள் எதையும் பறிக்கவும் இல்லை. அதுமட்டுமல்ல பேச்சுவார்த்தைகளில் அவர் தொடர்ச்சியாக கலந்துகொள்ள தடையும் விதிக்கவில்லை.

அவ்வாறிருந்தும் கருணா ஏன்தலைவர் பிரபாகரன் அவர்களின் அழைப்பை ஏற்று வன்னிசெல்லவில்லை? வன்னி சென்றால் தாம் தடுத்து வைக்கப்படுவோம் என்ற சந்தேகம் ஏன்வந்தது? அதாவது முரண்பாடோ அன்றிக்குற்றங்களோ அற்றவராக இருப்பின் அவர் ஏன் இத்தகைய சந்தேகம் கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டது?

மாறாக விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தினால் கருணா அமைப்பிலிருந்து நீக்கப்படும் வரை அவர் மீது ஊழல் தொடர்பான குற்றச்சாட்டோ அன்றி தனிப்பட்ட நடத்தைகள் தொடர்பான குற்றச்சாட்டோ சுமத்தப்படவில்லை. அவர் தமிழீழ தேசியத்தலைவருக்கும், மக்களுக்கும் துரோகம் இழைத்தாகவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக கருணா பிரிந்து செல்வது தொடர்பான செயற்பாட்டின் மீதே குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதாவது கருணா மீதான நடவடிக்கை அண்மைய அவரின் செயற்பாட்டின் விளைவு மட்டுமே.

ஆகையினால், கருணா மடியில் கனமில்லை எனின் தேசியத்தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருக்க முடியும். தனது கோரிக்கையை முன்வைத்திருக்க முடியும். தமது மக்களின் அபிலாசைகள் இவைஎன கூறிஇருக்க முடியும். ஆனால், கருணா அவ்வாறு நடந்து கொள்ளாது இயக்க விதிகளுக்கும், ஒழுங்குகளுக்கும் மாறுபட்ட விதத்தில் நடந்து கொண்டுள்ளார். அர்த்தமற்றதும், உண்மைக்குமாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதோடு பொய்யான தகவல் களையும் வெளியிடுபவராக உள்ளார். தனது தனிப்பட்ட ரீதியிலான தான்தோன்றித் தனமான முடிவுகளுக்கு மக் களைச் சாட்டாக்கிக் கொள்ள முனைகிறார்.

கருணாவின் இச்செயலானது தமிழ் மக்களுக்குப் பெரும் வேதனையையும், துயரத்தையும் அளிப்பதாகியுள்ளது. சிங்களப் பேரினவாத சக்திகள் ஒன்றுதிரண்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என முனைப்புடன் தேர்தலில் இறங்கியுள்ள நிலையில், கருணாவின் நடவடிக்கையானது தமிழ் மக்கள் இடையில் பிளவுகளையும் அவநம்பிக்கைகளையும், தோற்றுவிப்பதாகவும் மாறியுள்ளது. தமிழ் மக்கள் தமது தேசியம் பற்றிய நிலைப் பாட்டில் உறுதியாக இருப்பினும்கூட, கருணாவின் நடவடிக்கை தமிழ் தேசியத்திற்கு ஊறு விளைவிக்கும் ஒன்றே ஆகும்.

# தமிழரின் வாக்குகள் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வகையில் அமைய வேண்டும்

### -யாழ் .ஆயர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக செயற்படக்கூடிய கூட்டமைப்பினரையே யாழ்ப்பாண வாழ்தமிழ்மக்கள் எதிர்வரும் தேர்தலூடாகத் தெரிவு செய்யவேண்டும் என யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ்சௌந்தர நாயகம் ஆண்டகை வேண்டு கோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் மக்களுக்குள்ள கடப்பாடுகள் குறித்து சனிக்கிழமை ஆயர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறுவேண்டுகோளை விடுத்துள்ளார்.

1977ஆம் ஆண்டிற்குப் பின் இம்முறை நடைபெறவுள்ள தேர்தல் யுத்தமற்ற சூழ்நிலையில் நடத்தப்படுகிறது. இதில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கட்சிகள் கூட்டாக இணைந்து போட்டியிடுகின்றன. இந்நிலையில் மக்கள் இடுகின்ற ஒவ்வொரு வாக்கும் தமிழ் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் விதமாக அமைந்துள்ளது. எனவே மக்கள் தமது ஒன்றுபட்டமன உணர்வுகளை சுவதேச சமூகத்திற்கு பிரதிபலிக்கும் விதமாக தமது வாக்குகளை வழங்க வேண்டும் எனவும் அதில் மேலும் கோரப்பட்டுள்ளது. (33)

# வரட்சியால் பாதிப்புற்றோருக்கான உதவிகள் மலையக மக்களையும் எட்டவேண்டும்

### -சிறிலங்கா சனாதிபதியிடம் கோரிக்கை

வரட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணஉதவிகள் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வேண்டுகோளை விடுத் துள்ளார்.

தற்போது கடும் வரட்சி ஏற்பட்டுள்ளதால் கொட்டகலை, கெட்டதனியா போன்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் வேலை மாத்திரமே நிர்வாகத்தினால் வழங்கப்படுகின்றது. எனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனசதாசிவம் சனாதிபதியைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சந்திரிகா ஆட்சியமைப்பின் வெளிநாடுகள் உதவி அளிக்காது

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவிக்குவந்தால் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்க மாட்டாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி அமைக்கும் ஒரு திடமான அரசாங்கத்தால் மாத்திரமே அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக அமுல் செய்ய முடியும் என்று அவர் சொன்னார். மகரகம என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

## ஐ.சு.ம.மு. உறுப்பினர் கட்சியிலிருந்து விலகல்

ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினரும் சனாதிபதியின் சட்டத்தரணியுமான விஜேதாச ராஜபக்ஸ தனது பெயர் தேசிய பட்டியலில் இடம் பெறாததால் கட்சியின் அங்கத்தவர் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக லக்ஸ்மன் கதிர்கமருக்கு அறிவித்துள்ளார். இது சம்பந்தமாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐ.தே.முன்னணி மீண்டும் ஆட்சியமைத்தாலும் சமாதனப் பேச்சுக்கள் தொடர வாய்ப்பில்லை

### -சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கூறுகின்றார்

எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெற்றால் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பது ஒரு கட்டுக்கதை கபடநாடகம் என காலிமாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் விமலரட்ணபால டெய்லி நியூஸ் பத்திரிக்கைக்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சை வழங்கமாட்டார் எனவும் இதனால் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வது இயலாத காரியம் எனவும்அவர் மேலும் தெரிவித்தார்.அத்தோடு பாதுகாப்பு அமைச்சு இல்லாமல் சமாதான திட்டத்தை முன்னெடுக்க முடியாதென ஏற்கனவே ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார் எனவும் ரட்ணபாலகூறினார்.

இக்கட்டான நிலைமையில் எப்படி பிரதமர் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க முடியும் மக்களை பிழையான வழியில் நடத்துகிறார். மக்கள் உணர்ந்து வாக்களிக்க வேண்டுமென ரட்ணபால கூறியுள்ளார்.

# நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் எக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது

### -முன்னாள் அமைச்சர் மிலிந்தமொறகொட

எதிர்பார்க்கும் பெரும்பான்மையை எந்தக்கட்சியும் பெறமாட்டாது என ஐக்கிய தேசிய முன்னணி அரசின் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட, கோமாகம கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

நிலையற்ற அரசாங்கம் பிரச்சினையை தீர்க்க முடியாது அத்தோடு நாட்டின் பொருளாதாரமும் நடுச்சந்தியில் தான் நிற்கும் என அவர் தெரிவித்தார்.

எனவே நிரந்தரமான பலமுள்ள அரசாங்கத்தை தெரிவு செய்வது மக்களின் கைகளிலேயே உள்ளது என அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் அரசியல்லாபம் கருதிக் கலைக்கப்பட்டால் எதிர்கால சந்ததியினரின் எதிர்பார்ப்புக்கள் மங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இந்தியா, யப்பான், அமெரிக்கா, நோர்வே, தாய்லாந்து ஐரோப்பிய நாடுகள் அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனினும் நாட்டின் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் தொடர மக்கள் ஆணையை வழங்கவேண்டுமெனவும் மிலிந்த மொறகொட கேட்டுள்ளார்.

# இந்தியா-பாகிஸ்தான் தொடர் டிக்கெட்பெற ரசிகர்கள் பொலிசாருடன் மோதல்

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெறவுள்ள முதலாவது ஒரு நாள் போட்டிக்கான டிக்கெட் பெறுவதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ரசிகர்கள் பொலிசாருடன் மோதிக்கொண்டுள்ளனர்.

கராச்சி தேசிய அரங்கில் இப்போட்டிக்கான டிக்கெட்டுக்களைப் பெறுவதற்காக ஆயிரக்கணக் கான ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

எனினும் அதிகாரிகள் ஞாயிறு வரை டிக்கெட் விநியோகிக்கப்படமாட்டாதென தெரிவித்ததையடுத்து இவர்கள் குழப்பம் விளைத்ததாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இப்போட்டிக்கு ஆகக்குறைந்த பெறுமதியுடைய டிக்கெட்டின் பெறுமதி 1500 பாகிஸ்தான் ரூபாவாகும்.

# கருணாவுடன் மற்றுமொரு ஒப்பந்தம் செய்துகொள்வது இயலாதவிடயம்

## கண்காணிப்புக்குழுப் பிரதித்தலைவர்

கருணாவுடன் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்வது இயலாத விடயம் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் கொக்லண்ட் தெரிவித்துள்ளார். புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளது எனகூறிய அவர் விடுதலைப்புலிகளின் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்றுள்ளதால் மற்றுமொரு ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்தார். புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று புதிதாகச் செய்யப்பட வேண்டுமென்ற எந்தவொரு உத்தியோக பூர்வகோரிக்கையும் பெற்றுக் கொள்ளவில்லையெனவும் கூறினார்.

# பௌசியின் இல்லத்தின் மீது இனம்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம்.பௌசியின் இல்லம் மீது நேற்று முன்தினமிரவு இனம்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டுள்ளது.

இரவு ஒன்பது மணியளவில் பம்பலபிட்டிலுள்ள அவரது இல்லத்தில் தனது சகாக்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தவேளை, "டொல்பின்" ரக வாகனம் மற்றும் மூன்று ஆட்டோக்களில் வந்த குழுவினர் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

முன்னதாக இவர்கள் வாசலில் நின்ற ஆதரவாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இவ்வேளை 150க்கு மேற்பட்ட கட்சி ஆதரவாளர்கள் அவரது இல்லத்தில் இருந்துள்ளனர். தாக்குதல் நடத்தியோரில் ஒருவர் ஆதரவாளர்களால் பிடிக்கப்பட்டதாகவும் அதனையடுத்து பொலிசாரால் மேலும் இருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மனிதாபிமான..

பதில்:-

இன்று கூடநாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வந்த மட்டு-திருமலை ஆயர் அவர்களையும் அவரே வந்த பல வர்த்தகர்கள் இன்னும் சில புத்திஜீவிகளை நாங்கள் சந்தித்துக் கதைத்தோம் அதற்கமைவாக / கருணா என்கின்ற தனி மனிதனுடைய முடிவுக்குத் துணையாக இருந்து சிலர் சில மோசமான மனிதாபி மானத்திற்கு அப்பாற்பட்ட மனிதாபிமானத்தை மதிக்காத சில செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அது எமக்கும் அந்த மக்களுக்கும் பெரிய வேதனையைத் தந்தாலும் ஆனால் இந்தச் செயற்பாடு என்பது மக்கள் மத்தியில் நிலைத்து நிற்காது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம் / ஏனென்றால் இப்படியான செயற்பாடுகள் எங்குமே நிலைத்ததுமில்லை. இது வெற்றியடைந்ததுமில்லை. எனவே நாங்கள் எங்களுடைய மக்களிடம் கேட்டுக் கொண்ட விடயம் அவரை அங்கிருந்து அகற்றுவதோடு மக்கள் அவரைத் தனிமைப்படுத்தி அவர் தனிமைப்பட்டு அவருடைய செயற்பாடும் அவரிற்குத் துணைபோகின்றவர்களுடைய செயற்பாடும் இல்லாமல் போவதற்கு அந்த மக்கள் அதற்கேற்றவாறு செயற்பட வேண்டும் அதனை அந்த மக்கள் கேட்க வேண்டும். என்பது தான் எங்களுடைய வேண்டுகோளாக இருக்கின்றது. எங்களுடைய தலைமையும் அந்தச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு பல ஆலோசனைகளையும் பல திட்டங்களையும் வகுத்து அதற்கேற்றவாறு எங்களுடைய தளபதி அவர்களும் செயற்படுகின்றார். நிச்சயமாக அதற்கு அமைவாக அந்த செயற்பாடுகள் வெற்றிகரமாக நடக்கும் என்பதை நாங்கள் நம்புகின்றோம்.

கேள்வி:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது. இந்தத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களிப்பதென்பது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே இன்று ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்ற நடவடிக்கையாக இருக்கின்ற சூழ்நிலையிலே இதை நிறுத்தியிருக்கின்ற செயல் நடந்திருக்கின்றது. இந்த நிலையில் வேட்பாளருக்கோ அந்த மக்களுக்கோ நீங்கள் என்னசொல்ல விரும்புகிறீர்கள்.

பதில்:-

இது தற்காலிகமானதொரு செயற்பாடாகத்தான் இருக்கும் நாங்கள் நினைக்கின்றோம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அது ஒரு தற் காலிக நடவடிக்கையாக நிறுத்தப்பட்டிருக்கலாமே ஒழிய நிரந்தரமாக அதை நிறுத்தி வைப்பதென்பது ஒரு முடியாத காரியமாகவே இருக்கும் என்றார்.

## தேசியத்..

சகலதுறைகளிலும் பெண்களை வளர்த்தெடுத்தார். இதனால் எதுவெல்லாம் பெண்களால் முடியாது என உணரப்பட்டதோ அதுவெல்லாம் பெண்களால் முடியுமென நிருபிக்கப்பட்டது.

இதனால், இன்றைய தினத்தில் தமிழீழ தேசியத் தலைவரின் செயலுக்கு தமிழீழப் பெண்கள் நன்றி கூறக்கடமை பட்டுள்ளனர். தலைவரின்வழி நடத்தலினாலேயே தமிழீழப் பெண்கள் கடந்த காலபோரியல் வரலாற்றில் எட்டமுடியாத தியாகங்களையும், சாதனைகளையும் செய்து தமது இருப்பினைதெளிவுபடுத்தியுள்ளனர் என்றார். (33)

## பிரிட்டிஷ்...

டுள்ள நெருக்கடி பற்றியும், பேச்சுக்கள் நடத்தப்பட உள்ளன.

அரசியல்துறை பொறுப்பாளரை சந்தித்தபின்னர் பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணிமனைக்கு சென்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்கள்என்பது பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்து கிளிநொச்சியில் இயங்கிவரும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து இங்குள்ள நிலவரங்கள் தொடர் பாக கேட்டறியவுள்ளார்.

அத்துடன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவுடன் செயற்பட்டுவரும் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அலுவலகத்துக்கு சென்று வெடிபொருள் அகற்றல் தொடர்பாக கலந்துரையாடுவதுடன் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களையும் இவர் பார்வையிடுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ)

## கூட்டமைப்பு..

வரை மறியல் போராட்டத்தைக் கைவிட ந. ரவிராஜ்கும் மறுத்து விட்டார். இதையடுத்துஅவரது ஆதரவாளர்கள் விடுவிக்கப்பட்டதையடுத்து மறியல்போராட்டமும் கைவிடப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், இராணுவ பொலிஸ் உயர் பாதுகாப்புடன் ஹைஏஸ் ரக வானொன்றில் ஒலி பெருக்கிகளை பொருத்தி ஈ.பி.டி.பி.யினர் பிரச்சார நடவடிக்கைகளில் சாவகச்சேரியில் நேற்று பிற்பகல் ஈடுபட்டிருந்தனர். முன்னதாக சாவகச்சேரி நகரப் பகுதியில் நின்றுபிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த அவர்கள் கண்டி வீதியூடாக சங்கத்தானைப் பகுதி நோக்கிச் சென்றுள்ளனர்.

அதேவேளை, ஏற்கனவே அப்பகுதியில் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஓட்டோ ஒன்றில் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போதே ஈ.பி.டி.பி.யின் வாகனத்திலிருந்த பொலிசார் ஓட்டோவில் பூட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளை நிறுத்த நிர்ப்பந்தித்துள்ளனர். ஆயினும், உரிய பொலிஸ் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டதைக் காரணங்காட்டி அதற்கு உடன்பட அவர்கள் மறுத்துவிட்டார்.

இதனால், கோபமுற்ற பொலிசார் தர்க்கத்தில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்தனர். சம்பவத்தை கேள்வியுற்று அங்கு விரைந்த ந. ரவிராஜ் ஆதரவாளர்களை விடுவிக்குமாறு கோரி பொலிசாருடன் வாக்கு வாதத்தில்ஈடுபட்டார். அவ் வேளையில் பொலிசாரால் அவர் அவமானப் படுத்தும் வகையில் நடாத்தப்பட்டதையடுத்து பிற்பகல் 5 மணி முதல் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். எனினும் 5.4மணியளவில் ஆதரவாளர்கள் விடுவிக்கப்பட்டதையடுத்து அவர் மறியலை விலக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (27)

## யாழ்...

யாழ். மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு யாழ். மாவட்டத்தில் போட்டியடைகின்றது இதற்கு ஆதரவாக இக்குழு வின் வேட்பாளர்களில் ஒருவரான செபத்மநாதன் தலைமையிலான குழுவினர் பிரச்சார நடவடிக்கை என்ற பெயரில் மேற்படி சந்தியில் நின்று கொண்டு தமிழ் மக்களின் மன உணர்வுகளுக்கு விரோதமான கருத்துக்களை விதைக்கும் பிரசுரங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக கொண்டிருந்தனர்.

இதனைப் புறக்கணிப்பு செய்தவர்களிடத்தே இவர்கள் வீண் வாதங்களில் ஈடுபட்டதனால் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அடிதடியில் முடிவடைந்ததில் பிரஸ்தாப வேட்பாளர் உட்பட 4கட்சி ஆதரவாளர்கள் மக்களால் கடுமையாக நையப்புடைக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டதுடன் அவர்களிடம் இருந்த துண்டுப்பிரசுரங்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவையை அவ்விடத்தில் போட்டு மக்கள் தீமூட்டி எரித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் மக்களை வன்முறைக்குத் தூண்டும் விதத்தில் கட்சிக்காரர்கள் நடந்து கொண்டமை குறித்து மக்கள்ஆட்சேபனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இது தொடர்பாக சுயேட்சைக் குழு உறுப்பினர் உட்பட நால்வர் செய்த முறைப்பாட்டை பொலிசார் ஏற்க மறுத்துள்ளனர்.

மக்களை வன்முறைக்குத் தூண்டும் விதமாகவும் தேர்தல் சட்டங்களை மீறியுமே இந்தப் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தவறு சுயேட்சைக் குழுவினருடையதே எனவே முறைப்பாட்டை ஏற்க முடியாதென பொலிசார் நிராகரித்துள்ளனர். (33)

## தலைவரை...

கேணல் பதுமன் அவர்கள் கூறுகையில்;

நான் திருகோணமலையிலிருந்து வந்து தலைவரை அடிக்கடி சந்திப்பது வழக்கம் மூன்று மாதத்திற்கொருமுறை அல்லது நான்கு மாதத்திற்கொருமுறை சந்திப்பது வழக்கம். அந்தசந்திப்பின் நோக்கமாகத்தான் நான் வந்துள்ளேன்.

இப்போது தனிமனிதனான கருணா தனியாக இயங்குவதற்கு செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் அதனால் திருகோணமலை மாவட்டத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லை எமது தேசியத் தலைவருடைய சிந்தனைக்கமைவாக நாங்கள் எல்லோரும் ஒரு குறிக்கோளுக்காக நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம்.வெளியில் கேட்கும் சிலசெய்திகளைக் கொண்டு நாங்கள் அச்சமடையாமல் தேசியத் தலைவரை நாங்கள் நம்பி அச்சங்களை தீர்த்துக் கொள்ளலாம்.என நான் நினைக்கிறேன் எமதுதேசியத் தலைவர் உயர்ந்த கொள்கைக்காகவும் உயர்ந்த விடுதலைக்காகவுமே போராடிக் கொண்டிருக்கிறார். இதற்கு அமைவாகத் தான் எமதுசகல பிரதேசங்களிலேயும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இதற்குள் சாதியோ, மதமோ, பிரதேசமோ எந்த வேறுபாடு மில்லை ஆனால் மட்டக்களப்பில் ஏற்பட்டுள்ளது ஒருதனிமனிதனுடைய பிரதேச வாதம் அது அவர் தனிப்பட்ட கருணா தான் அதைச் செய்கிறார் அது ஒருதுரோகத்தனமானது ஆனால் அது நிலைக்கப் போவதுமில்லைஇன்னும் சொற்பக் காலத்தில் அதற்கு ஒருமுடிவு வரும் ஏனென்றால் இது உயர்ந்த கொள்கையோடு உயர்ந்த இலட்சியத்தோடு வழிகாட்டலிலே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

எமது தேசியத் தலைவருடைய வழிகாட்டலுக்கு தவறும் பட்சத்தில் எந்தவொரு பொதுமகனுமோ எந்தவொரு போராளியுமோ அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள்.

எமது நாளாந்த செயற்பாட்டிலே சத்தியப்பிரமாணத்திலே போராளிகள் இந்தக் கொள்கையைத்தான் சொல்லிக கொண்டிருக்கிறார்கள் பொதுமக்களும் இப்போது இதையே உரைத்துக் கொண்டிருக்கிறார்கள் இதற்கு மாறாக மக்கள் சிந்திக்க மாட்டார்கள் மாறாகப் போபவர்களுக்கு மக்களோ அல்லது போராளிகளோ தண்டனைகொடுப்பார்கள் என்று நான் நினைக்கிறேன் என்றார்.

## மட்டு....

துணைத்தளபதி, அரசியல் துறைப் பொறுப்பாளர்கள் ஏனைய அனைத்துத் தளபதிகளும் அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகளை விளங்கப்படுத்தி னார்கள்.

கருணா என்கின்ற ஒரு தனிமனிதனால் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் வெறியாட்டங்கள் சம்பந்தமாகஎடுத்து விளக்கினார்கள். நிச்சயமாக மிக விரைவிலே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலே நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து வெளியேற்றப்பட்ட கருணாவையும் அங்குள்ள அவர்களுடைய செயற்பாடுகளையும் மிக விரைவில் எமது தலைமைப் பீடத்தால் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு ஏற்ப கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகஉறுதியளித்துள்ளார்கள். இந்த நிலையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் எந்தவித குழப்பமும் இல்லாமல் கருணா என்கின்ற தனிமனிதன் கருணாவினுடைய தேசவிரோதச் செயல்கள் குறிப்பாக விடுதலை அமைப்பினுடைய கட்டுப்பாடுகளை மீறி செயற்பட்ட சிலநடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கிருந்து வந்த தளபதிகள் அவர்களுக்கு, விளக்கியிருக்கின்றார்கள். அந்த வகையில் கருணாவால் எழுப்பப்படுகின்ற பிரதேசவாத உணர்வுகளுக்குள் இழுபடாது நாங்கள் ஒற்றுமையோடு ஒன்றுபட்ட தேசத்திற்குள் ஒன்றுபட்ட மக்களாக நாங்கள் இருந்து எங்களுடைய தேசியத் தலைவருடைய வழி நடத்தலிலே எமது தமிழினம் ஒன்றுபட்டுச் செயற் படுவதனூடாகவே ஒவ்வொரு தமிழனுக்கும் பாதுகாப்பு எதிர்காலமும் இருக்கிறது என்ற உண்மையை, யதார்த்தத்தை எங்களுடைய மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத் தளபதிகள், பொறுப்பாளர்கள் தெளிவாக விளக்கினார்கள். அதை அவர்களும் தெளிவாகவே விளங்கிக் கொண்டார்கள். எங்களுடைய தேசியத் தலைவர் மீதும் தேசியத் தலைமை மீதும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் எவ்வளவு தூரம் பற்றுதியோடும் நம்பிக்கையோடும் இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள்அதிலே தெளிவாக்கினார்கள். அது நிறைவு தரும் விடயமாக இருந்தது. தற்போது அங்கே மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலே இருக்கின்ற ஏனைய மாவட்ட மக்களை வெளியேறும்படியும் அவர்கள் மீதும் பல அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படுகின்ற நிலைமைகளை அவர்கள் கூறினார்கள். ஆகவே, மிகவும் மோசமானதும்ஒரு கொள்ளைக் காரக் கும்பல்களால் நடாத்தப்படுகின்ற செயல்கள் போலவே அங்கு கருணாவின் அடியாட்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அவர்கள் கூறினார்கள். நாங்கள் உறுதியளித்துள்ளோம். அந்த மக்களை நம்பிக்கையோடு இருக்கும்படியும், மிகவிரைவில் இவை முடிவிற்கு வந்து நிலைமைகள் சீராகும். அதுவரை மக்கள் மிகவும் பொறுமைகாக்கும்படியும் கூறியிருக்கின்றோம்.

இன்றைய சந்திப்பை பொறுத்த மட்டில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்களின் பிரதிநிதிகளாக வந்தார்கள் அவர்களுக்குத் தெளிவாக கருணாவின் சுயநல வெறித் தனத்தைப் பற்றியும் அவருடைய செயற்பாடு கள் சம்பந்தமாகவும் முன்வைத் ததை அவர்கள் விளங்கிக் கொண் டார்கள். இந்த வகையில் இன் றையசந்திப்பு ஆக்கபூர்வ மான தாகவும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள்மத்தியிலே ஏற்படுத்தப்பட்ட குழப்பத்திற்கு ஒரு தெளிவைக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

கேள்வி: ஒரு முக்கிய நபராகக் கருணா கடந்த காலங்களில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்தவர். இப்போது அவர் இந்த இடத்தை விட்டு விலகிச் செல்வதானால் அதற்கான ஏற்பாடுகள் வழிவகைகள் செய்து கொடுக்கப்படுமா?

பதில்:-ஆம். நிச்சயமாக அவர் பல குற்றச்செயல்களில் ஈடுபட்டிருக்கின்றார். நிச்சயமாக அந்தக் குற்றச் செயல்களை எங்களுடைய தேசியத் தலைவர் மன்னித்து அவர் பொது வாழ்க்கையில் ஈடுபடக் கூடிய அளவிற்கு ஒரு பாதுகாப்பு உத்தரவாதத்தையும் எதிர்கால வாழ்வுக்கான நடை முறைகளையும், தேவைகளையும் ஒழுங்குபடுத்திக் கொடுக்க எங்களுடைய தலைவர் இன்னும் தயாராக இருக்கின்றார். அந்த நிலையில் கருணா மனந்திரும்பி இயக்கத்தின் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட்டு தனது செயற் பாடுகளை மாற்றிக் கொள்வாரேயானால் அவர் இந்த தேசத்திற்கும் இந்த மக்களும் தமிழ்த் தேசியத்திற்கும் இடையூறு விளைவிக்காது உரிமைக்கான இந்தப் போராட்டத்திற்கு எந்தக் களங்கமும் ஏற் படுத்தாது அவர் விலகிக் கொள்வதெ சாலச் சிறந்தது. இன்னும் எமது தலைவர்மனிதாபிமான நோக்கோடு அதைச் செய்வதற்குத் தயாராய் இருக்கின்றார்கள். ஆகவே கருணா இந்தச் சந்தர்ப் பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுமாக இருந்தால் அவருக்கு அது சிறந்ததாக இருக்குமென நம்புகிறோம் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.